# பஜனை சம்ப்ரதாயமும் இசையும்



**N.MuthuKrishnan**
**Asst.Professor Invocal**
**Faculty of Fine Arts**
**Department of Music**
**Annamalai University**
**Chidambaram**

**முன்னுரை:**

இஷ்ட தெய்வத்தின் நாமத்தை ஸ்மரித்தால் ஸனாதன தர்மத்தில் உண்மையான சிரத்தை உண்டாகும். நாமம் சொல்லச் சொல்ல நல்ல கார்யங்களில் முன்னேற்றம் ஏற்படுகிறது. நல்ல கார்யங்களை செய்ய செய்ய மனது சுத்தமாகிறது சுத்தமான மனதில் பகவான் பிரகாசிக்கிறான்.

"கலியுகத்தில் நற்கதி அடைய சுலபமான மார்க்கம் நாம சங்கீர்த்தனமே" என்று நாம சித்தாந்தம் செய்த ஸ்ரீமத் போதேந்திராள் ஸ்ரீ அய்யாவாள் அவர்களின் வழிமுறையில் மருதாநல்லூர் சத்குரு சுவாமிகள் பாரதம் முழுவதும் பாதயாத்திரையாகச் சென்று ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள், ஸ்ரீ நாராயண தீர்த்தர், பத்ராசல ராமதாஸ், ஸ்ரீ ஸ்ரீ புரந்தர தாஸ் என்று ஆங்காங்கே வாழ்ந்த, பக்தர்கள் இயற்றிய கீர்த்தனங்களை சேகரித்து தொகுத்து தக்ஷிண சம்பிரதாய பஜனை முறையை வழிவகுத்து கொடுத்தார்.

**பஜனை சம்பரதாயம்**

இந்த முறையை ஆதாரமாகக் கொண்டு பின்னால் வந்த பாகவதப் பெரியோர்கள் அவர்களுக்கு கிடைத்த மற்ற கீர்த்தனங்களையும் அந்தந்த ரசத்திற்கேற்ப சேர்த்து சங்கீர்த்தனருசியை அதிகரிக்க செய்தார்கள்

**சம்பரதாய பஜனை உருவாக்கம்:**

சம்பிரதாய பஜனையை உருவாக்கி கொடுத்த மருதா நல்லூர் சத்குரு சுவாமிகளையும் பிறகு அவருடைய குருவாக விளங்கும், ஸ்ரீ மத் போதேந்தி ராளையும், ஸ்ரீ ஸ்ரீதரஅய்யாவாள் வாளையும்பாடி, மற்ற குருநாதாளையும் பாடும் வழக்கம் ஏற்பட்டது. அது போல் அஷ்டபதி, தரங்கம் ராமதாஸ், கபீர் தாஸ், புரந்தரதாஸ் என்ற வரிசையும் ஏற்பட்டது.

அந்த பஜனை சம்பிரதாயத்தை பாரத தேசவத்தில் ஆங்காங்கே தோன்றிய மஹான்களின் கீர்த்தனங்களை ஒரு முறையாக வகுத்து தொன்று தொட்டு நாம் உபாஸித்து வரும் பகவத் ஸ்வருபங்களில் பேத பக்தி இல்லாமல் ஸம நோக்கத்தோடு நினைத்து இஷ்ட தெய்வத்தைப் பற்றி விஸ்தாரமாக பஜனை செய்ய நாமஸ்ங்கீர்த்தன பத்ததி அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.. அதனால் மஹான்களின் நினைவும், எல்லா தெய்வங்களின் நினைவும் ஒருங்கே ஏற்படுகிறது.

எனது குருநாதர்களுடைய பாதார விந்தம் தொட்டு இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

**ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் வடிவமைத்த பஜனை சம்ப்ரதாயம்:-**

பஜனை சம்ப்ரதாயம் முதன் முதலில் தெலுங்கு இன மக்களால் தொடங்கப்பட்டது. மருதாநல்லூர் சத்குரு சுவாமி பஜனை

சம்பந்தாயத்தை பாடும் முறைகளை அழகாக வகைப்படுத்திக் கொடுத்தார். அதன் பிறகு இன்று வரை சிறு சிறு மாற்றங்களைக் கொண்டு முதுமை மாறாமல் பாடிக்கொண்டு வருகிறார்கள். தென்னிந்திய பஜனை சம்ப்ரதாய பத்ததியை உருவாக்கிய ஸ்ரீ ஸத்குரு சுவாமிகள் மடத்தில் தினமும் நடைபெறும் பஜனை முறையைப் பற்றிய செய்திகளைக் காணலாம்

**நிகழ்ச்சி தொடக்கம்:**

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் ராம நாம ஜெபம் சிறிது மனித்துளிகள் செய்து பிறகு புண்டரீகம் என்று சொல்லப்படும் - 'ஜானகி காந்த ஸ்மரணம் என்று ஜெய் ராம ராம். இது போல் மற்ற கடவுளின் பெயரையும் சொல்லப்படுகிறது.

**தோடய மதங்களம்:**

தோடய மங்களம் என்பது நிகழ்ச்சியை தொடங்குவதற்குண்டான கீர்த்தனைகளைப் பாடி இறைவனுக்கு வெற்றி உண்டாகட்டும் என்பதை குறிப்பதாகும் முதலாவதாக பத்ராசல ராமதாஸ் இயற்றிய கீர்த்தனையைப் பாடப்படுகிறது.

**இராகம் :** நாட்டை

**தாளம் :** கண்டநடை

**சரணம் - 1**

ஜய ஜானகிரமண ஜய விபீஷ்ண சரண
ஜய ஸரோ ருஹ சரண ஜய தீன கருணா

(ஜய ஜயா)

**சரணம் - 8**

பாப ஸங்கவிதார பங்க்திமுக சம்ஹார

ஸ்ரீபதே சுருமார ஸீதா விஹாரா

(ஜய ஜயா)

எட்டு சரணங்களைக் கொண்டது. முதல் சரணமும் முடிவு சரணமும் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக

**இராகம்** : ஆரபி

**தாளம்** : திரிபுடை

இயற்றியவர் : அன்னமய்யா

**சரணம்**

ஸரணு ஸரணு ஸீரேந்திர ஸன்னுத

ஸரணு ஸ்ரீஸதி வல்லப

ஸரணு ராஹஸகர்வ ஸம்ஹார

ஸரணு வேங்கட நாயகா - ஸரனு ஸரணு

**சரணம்**

யென்னகல பரஹ்லாத பக்துலு

யெலபிதோ நினு கொலுவ வச்சிரிநா

வின்னபமு வினவய்ய தேவர

வேங்கடாசல நாயகா – ஸரணு ஸரணு

மேலும் மத்யமாவதி இராகத்தில் அன்னமாச்சாரியார் இயற்றிய நாராயணதே நமோநமோ - என்ற கீர்த்தனை ஸாவேரி இராகத்தில் விஜய கோபால ஸ்வாமிகள் இயற்றிய தேவேசகண ஆராதித என்ற

கீர்த்தனை பந்துவராளி இராகத்தில் விஜய கோபால சுவாமிகள் இயற்றிய 'மாதவ பவதுதே' என்ற கீர்த்தனையைப் பாடி தோடய மங்களத்தை நிறைவு செய்கின்றனர்.

**குரு கீர்த்தனைகள்:**

தோய மங்களம் முடிந்த பிறகு நாமாவளிகள் பாடப்படுகின்றன. அடுத்ததாக குரு கீர்த்தகைள் பாடப்படுகின்றன. அதாவது பகவன் நாம ஸ்ரீ போதேந்திர சுவாமிகள், ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவனாள் இருவர்களையும் தனது குருவாக நினைத்து பக்தர்கள் இயற்றிய பாடல்கள் மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் பஜனை சம்ப்ரதாயத்தில் முதன் முதலில் பாடுவதற்காக சேர்ந்துள்ளார்.

**இராகம்** : தோடி

**தாளம்** : ஆதி

இயற்றியவர் : ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள்

**பல்லவி**

ஸதமணி ப்ரணுதிம்புஸீனு வோ

ஸகியரோ த்யாநிந்து காநெறு

**அனுபல்லவி**

மதிகல யட்டி நாம ஸித்துலகு உன்

மத்துலைந் ஸ்ரீ போதேந்த்குலே

**சரணம்**

ராம நாமமு மிஞ்ச ஜேஸின

ரஸிகதா ப்ரபோத மூர்த்தியை

பூமிலோ போதேந்தர் குருலநி

பேருகொன்ன ஸ்ரீ கிருஷ்ண தலச் - (ஸதமணி)

இரண்டாஈவதாக ஸ்ரீ ஸ்ரீதர அய்யவாளின் கீர்த்தனைகளைப் பாடப்படுகிறது.

ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் இயற்றிய காம்போதி இராகத்தில் அமைந்த 'ஸ்வாமி மீரே கதி' என்ற க்ருதியைப் பாடப்படுகிறது, முன்றாவதாக சத்குரு கோதண்ட ராம சுவாமிகள் (மருதா நல்லூர் சத்குரு ஸ்வாமிகள் இரண்மடாவது பீடம்) தனது குருவான சத்குரு ஸ்வாமிகள் மீது இயற்றப்பட்ட அதடே பரப்பரும்மம் என்ற கீர்த்தனையும் பாடப்படுகிறது.

மூன்று குரு கீர்த்தனைகளைப் பாடிய பிறகு மராட்டியில் அமைந்த குரு அபங்கங்கள், ஹிந்தியில் அமைந்த குரு பஜன்கள் சாது அபங்கங்கள், நாமத்தின் மகிமையைப் பற்றிய பாடல்கள், தமிழில் அமைந்த குரு கீர்த்தனைகளையும் என்ன புண்ணியம் செய்தேனோதி கௌளை – ஊத்துக்காடு வேங்கட சுப்பைய்யரின் கீர்த்தனையை பாடுவதும் வழக்கம் உண்டு

**ஜெய தேவர் அஷ்டபதி:**

ஜய தேவர் இயற்றிய 24 அஷ்டபதியை பாடுவர். ஒவ்வொரு அஹ்டபதியும் எட்டு சரணங்களைக் கெண்டது. இதில் முதல் அஷ்டபதி 11 சரணங்களையும் தச அவதாரத்தைப் பற்றியது. பத்தாவது அஷ்டபதி ஐந்து சரணங்களையம் கொண்டிருக்கிறது. இந்த 24 அஷ்டபதியும் ராதை, கிருஷ்ணனுடைய லீலைகளைப் பற்றியும் விரக தாகங்களைப் பற்றியும் ஜீவாத்மா பரமாத்மாவை அடைந்த முறையைப் பற்றியும்

விவரிக்கப்பட்டவையாகும். ஒவ்வொரு அஷ்டபதியும் முன் ஸ்லோகம், பின் ஸ்லேகங்களுடன் அமையப் பெற்றுள்ளது.

**பஞ்சபதி:**

ஐந்து வாக்கேயக்காரர்களுடைய கீர்த்தனையை உள்ளடக்கியது. நாராயண தீர்த்தர், பத்ராசல ராமதாஸர், புரந்தரதாஸர், ஸதாசிவ ப்ரும்மேந்திராள் சிவ கீர்த்தனை (கோபால கிருஷ்ணபாரதி) பாபநாச சிவன், முத்து தாண்டவர் மாரிமுத்தா பிள்ளை போன்றோர்கள் இயற்றிய கீர்த்தனைகளில் ஏதேனும் ஒன்று பாடப்பட்டு வருகிறது.

**தியான கீர்த்தனைகள்:**

விநாயகர், ஸரஸ்வதி முருகன் சிவன், அம்பாள், ராமர், சீதை, கிருஷ்ணன், ருக்மணி, நரசிம்மர் லஷ்மி, வெங்கடாஜலபதி, ரங்கநாதர், பாண்டுரங்கன், ஆஞ்சநேயர், கருடன் போன்ற இறைவன் மேல் இயற்றப்பட்ட உருப்படிகளைப் பாடுவார்கள் தற்காலத்தில் ஐயப்பன் மேல் இயற்றப்பட்ட பாடல்களும் பாடப்படுகிறது.

இதன் பிறகு கத்யம், பத்யம், விருத்தம் பாடப்படுகிறது. ச்ருங்கார ரசம் ததும்பிய பாடல்கள் தத்துவப் பாடல்கள், அத்வைதப் பாடல்கள், தேவாரம், திருவாசகம், கீதம், வர்ணம், ராகம் - தானம்-பல்லவி, தில்லானா போன்ற இசை வகுப்படி வகைகளும் பாடப்படுகிறது.

**பஞ்ச பானஷ்**

ஐந்து மொழிகளில் கீர்த்தனைகள் பாடப்படுகிறது.

1. சமஸ்க்ருதம், 2. தமிழ், 3. தெலுங்கு, 4. கன்னடம், 5. மராட்டி (or) ஹிந்து ஷேத்ரமஹாத்மியம், சதுர்வேத பாராயணம், பூஜைகள் நடைபெறும்

**திவ்ய நாம கீர்த்தனைகள்:**

முதலில் சத்குரு ஸ்ரீ த்யாகராஜரின் இயற்றிய பைரவி இராகத்தில் அமைந்த 'உபச்சாரமு லனு சேகோனரா' என்ற க்ருதியைப் பாடி, அதற்கு அக்குழுவில் ஒருவர் அபிநயம் செய்வது வழக்கம்.

குத்து விளக்கில் ஐந்துமுகம் ஏற்றி அதற்கு பூஜை செய்து, நடுவில் வைத்து அதைச் சுற்றிக் கொண்டே பாகவதர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பாடுவர்.

இதில் பத்ராசல இராமதாஸர் இயற்றிய 16 கீர்த்தனைகள், விஸய கோபால யத்ந்திரர் இயற்றிய 7 கீர்த்தனைகள். பாடி நாராயண தீர்த்தர் தரங்கம் பாடப்படுகிறது. பிறகு கிருஷ்ணர் நாமாவளி ஒன்று பாடுவர். பின்பு சத்குரு தியாகராஜரின் திவ்ய நாம கீர்த்தனைகள் பாடப்படுகிறது.

இதன் பிறகு பாகவர்கள் அனைவரும் அமர்ந்து சுக ப்ருமம் ரீஷ்யால் சொல்லப்பட்ட கோபிகா கீதம் சொல்லப்படுகிறது.

**ராஸ லீலைகள்:**

கோலாட்டம், கும்மி ஆகியவை பாகவதர்களால் விளக்கைச் சுற்றி ஆடப்படுகிறகு, பிறகு சித்தர் பாடல்களைப் பாடி வைராக்கிய கீர்த்தணம் ப்ரார்த்தனை அபங்கம் பாடப்பட்டு தீபத்தை கடவுளிடம் எடுத்து வைப்பர். அப்பொழுது 3 ஆவது அஷ்டபதி பாடி ந்ருதயம் செய்யப்படுகிறது.

**டோலோஸ்ததும்:**

இறைவனை துயில் கொள்ள செய்வதற்கான பாடல்கள் பாடப்படும். இதில் சத்குரு ஸ்ரீ த்யாகராஜர், ஸ்ரீ ஸதா சிவ பரும் மேந்திராள், நாராயண தீர்த்தர், இயற்றிய கீர்த்தனைகள் பாடப்படுகிறது.

மறுநாள் காலை துயிலெழுப்ப பௌளி, பூபாளம், திருப்பள்ளியெழுச்சி கீர்த்தனைகள் பாடி துயிலெழுப்புவர்.

**ராதா கல்யாணம், சீதா கல்யாணம்:**

பஜனை சம்ப்ரதாயத்தின் முக்கிய நிகழ்ச்சியான ராதா கல்யாணம், சீதா கல்யாணம் , பத்மாவதி, ருக்மணி கல்யாணம் பத்மாவதி கல்யாணம் போன்ற கல்யாணங்கள் நடைபெற்று வருகிறது. இதில் எந்த கடவுளின் கல்யாணமாக இருந்தாலும் 24 அஷ்டபதி பாடுவது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அந்த முறையை அனைவரும் பின்பற்றி வருகின்றனர்.

கல்யாணம் நடைபெறும் சமயத்தில் சூர்ணிகை, ப்ரவரம், மங்களாஷ்டகம் ஸ்லோகங்களை சொல்லி 'திருமாங்கல்யதாரணம்' நடைபெறுகிறது.

இதில் வரும் சூர்ணிகை, ப்ரவரம், மங்களாஷ்டகம் ஒவ்வொரு இறைவனுக்கும் மாறுபடும்

**பவ்வளிம்பு, வசந்த உற்ஸ்தவம்**

திருமணத்தன்று இரவு பவ்வளிம்பு சீதாகல்யாணம், ருக்மணி, கல்யாணம் பத்மாவதி கல்யாணம் வசந்த உற்ஸ்தவம் நடைபெறும். தாளப்பாக்கம் சின்னய்யா அவர்கள் இயற்றிய பவ்வளிம்பு கீர்த்தனைகள் 24 பாடப்படுகிறது. பிறகு கோணங்கி தாஸர் பாடல் பாடி, விஸ்வ ருப

தரிசணம். ஆஞ்சநேயர் உற்ஸ்தவம் மங்களம் பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்வர்.

**முடிவுரை**

**"கலியுக தல்லி ஹரி நாமவ நெநேதரே**
**குலகோடிகளுத் தரி ஸீவது"**

என்ற புரந்தர தாஸரின் வாக்கிற்கிணங்க ஒரு குலத்தில் ஒருவராவது ஹரி நாமத்தை சொல்வரேயானால் அக்குலம் தழைக்கும். தொன்று தொட்டு பஜனை இசையின் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள், நோய்கள் நீக்கி நாட்டு வளம் பெருகும் பஜனை பாடுவோருக்கும், கேட்பவர்களுக்கும் தெய்வீகரத்தியும், சௌபாக்கியமும் ஏற்படும் என்பது முன்னோர் கருத்தாகும்.

**துணை நூற்பட்டியல்**


| | | |
|---|---|---|
| மருதா நல்லுஸர் ஸ்ரீ ஸத்ருகு | | |
| சுவாமிகள் சரித்திரம் | - | மருதா நல்லூர் மடத்தின்வெளியீடு |
| ஸ்ரீ ராதா மாதவ விவாஹ | | |
| மஹோத்ஸவ சிறப்புமலர் | - | அபிராமபுரம், சென்னை ஏப்ரல் 2008 |
| | | ப்ராசீன ஸம் ப்ரதாய் பஜன |
| உத்ஸவ பத்ததி | - | பாகவத சாம்ராட் ப்ரும்ம ஸ்ரீவெங்கட்ராம பாகவதர், திருவிடைமருதூர் |